**சுருக்கம்**

குழந்தைத் தொழிலாளர் – இண்டஸ் / தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் சிறப்புப் பள்ளியில் சிறந்த முறையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஊக்கப்பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்குதல் –ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(யு1) துறை**

**அரசு ஆணை(டி) எண். 215** **நாள்: 20.6.2008.**

**படிக்கப்பட்டது :**

**தொழிலாளர் ஆணையரின் கடித எண். ட்டி6/17212/2008, நாள். 4.4.2008.**

******

**ஆணை:-**

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின், 25.4.2008–ம் நாளன்று நடைபெற்ற மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:-**

> **“இண்டஸ் மற்றும் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின் கீழ் இயங்கும் 17 மாவட்டங்களில் உள்ள சிறப்புப் பள்ளிகளில் மாவட்டத்திற்கு ஒரு ஆசிரியர் வீதம் சிறந்த ஆசிரியர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு ரொக்கப் பரிசாக ரூ. 3,000–மும் பாராாடடுச் சான்றிதழும் வழங்கப்படும்.”**

**2. மேற்குறிப்பிட்ட அறிவிப்பிற்கிணங்க** மேற்குறிப்பிட்ட பரிசுத் தொகையினை வழங்க 2008-09-ம் நிதியாண்டில் ரூ.51,000/- (ரூ.3000/-X17=ரூ.51,000/-) செலவாகும் என தெரிவித்து தொழிலாளர் ஆணையர் அரசுக்குச் செயற்குறிப்பு அனுப்பியுள்ளார். மேலும், தொழிலாளர் ஆணையர் மேற்குறிப்பிட்ட பரிசு திட்டத்தினை செயல்படுத்த மாநில குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நலச் சங்கத்திற்கு அரசு ரூ.51,000/- (ரூபாய் ஐம்பத்தோராயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

3. மேற்கண்ட செயற்குறிப்பை அரசு கவனமாக பரிசீலித்து மேற்குறிப்பிட்ட பரிசுத் தொகையினை தொடரும் செலவினமாக வழங்க **2008–2009–ம்** நிதியாண்டில் ரூ. **51,000/–** (ரூபாய் ஐம்பத்தோராயிரம் மட்டும்) (ரூ. **3000x17**= ரு. **51,000**) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகின்றது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்

“2235 சமூக பாதுகாப்பும் நலனும்–02 சமூக நலன் 102 குழந்தைகள் நலன்– பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II மாநிலத் திட்டம் –KG – மாநில

குழந்தைத் தொழிலாளர் புதுவாழ்வு நலச்–சங்கத்திற்கு நிதியுதவி – 09
உதவித்தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை,
(து.தொகு. 2235.02 102 KG 09 32)

**5. மேற்காணும் செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கம் 2008–09 திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய நிதியொதுக்கத்தில் மேற்கொள்ளப்படும். இதனை எதிர்நோக்கி மாநில** குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நலச்சங்கத்திற்கு, மேற்குறிப்பிட்ட தொகையை பெற்று வழங்க தொழிலாளர் நல ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

**6.** தொழிலாளர் நல ஆணையர், பத்தி **3**–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை **2008–09** திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய நிதியொதுக்கத்தில் மேற்கொள்ள உரிய கருத்துருவை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**7** இவ்வரசாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். **33990**/தொ.வே./**08** நாள். **18/6/2008**–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண். **269** (இருநூற்று அறுபத்து ஒன்பது).

**( ஆளுநரின் ஆணைப்படி)**

ரமேஷ்குமார்கன்னா
அரசுச் செயலாளர்

பெறுநர்

**தொழிலாளர் ஆணையர், சென்னை.6.**
**தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் / இண்டஸ் குழந்தைத் தொழிலாளர் திட்டம்**
**மாவட்ட ஆட்சியாளர் (தொழிலாளர் ஆணையர் மூலமாக)**
**தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர், சென்னை–5**
**மாநில கணக்காயர், சென்னை–18**
**மாநில கணக்காயர், சென்னை–18 (பெயரில்)**
**மாநில கணக்காயர், (சி.ஏ.எஸ்) சென்னை–9**
**சம்பளக் கணக்கு அலுவலர், (தெற்கு), சென்னை–35**
**மாநில முதன்மைக் கணக்காயர் (உள் தணிக்கை )**
**தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி, தலைமைச் செயலகம், சென்னை–9.**

நகல்
**தொழிலாளர் நல அமைச்சரின், முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.**
**செயலரின் தனிச்செயலர், தொழிலாளர் மற்றம் வேலை வாய்ப்புத் துறை, சென்னை.9.**
**தொழிலாளர் மற்றம் வேலை வாய்ப்புத் (எப்) துறை, சென்னை.9.**
**நிதித் (தொ.(ம) வே.வா.) துறை, சென்னை.9.**
**நிதி (வரவு–செலவு / பொது II) துறை, சென்னை–9**
**இருப்புக்கோப்பு / உ.ந.**

/ / ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்